**கலவான பிரதேச சபை**
**இரத்தினபுரி மாவட்டம்**

## 01. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மே 02 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மே 08 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஜுன் 02 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கலவான பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் காசுப்பாய்ச்சல் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான வீதவரி மற்றும் ஏக்கர் வரி வருமானம் முறையே ரூபா 1,535,776 தொகை மற்றும் ரூபா 73,663 தொகையாக காணப்பட்ட போதிலும் முறையே ரூபா 1,629,261 தொகை மற்றும் ரூபா 80,316 தொகை என கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான வருமானம் ரூபா 100,138 தொகையினால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது வீத வரிக்காக வழங்கப்பட்ட கழிவுத் தொகை ரூபா 27,653 தொகையினை ஆண்டிற்கான செலவுகளுக்கு வரவு வைப்பதற்கு பதிலாக திரண்ட நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டு தொடர்பாக வாடகைக்கு கொடுத்திருந்த 02 ஆம் இலக்க மீன் பலகையின் வாடகையாளர் 2015 ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களுக்காக பணமாக செலுத்தியிருந்த ரூபா 144,583 தொகை மாத்திரம் வருமான விடய இலக்கம் 5.23 பொதுச் சந்தை வாடகை வருமான விடயத்தின் கீழ் சிட்டையிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்கான சிட்டையிடப்பட வேண்டிய பெறுமதி ரூபா 867,500 ஆகும். இதன் படி அவ் வருமான விடயத்தின் கீழ் ரூபா 722,917 இற்கான வருமானம் குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டிற்கான சம்பள மீளளிப்பு ரூபா 19,294,393 தொகை எனினும் ரூபா 19,231,103 தொகை என கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான சம்பள மீளளிப்பு ரூபா 63,290 தொகையினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டிற்கான நீதிமன்றத் தண்டப்பணம் வருமாத்தினை இனங்காணாமல் சிட்டையிடப்பட்டவை என ரூபா 10,000 தொகை மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் போது நன்கொடையாக கிடைத்திருந்த ரூபா 17,151,732 தொகை பெறுமதியான சொத்துக்கள் நன்கொடைகளின் பங்களிப்பு கணக்குகளின் கணக்கீடு

செய்யப்படாமல் மூலதன செலவீட்டிற்காக அரசிறை உதவுத் தொகை கணக்கின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டிற்கான பண்டங்கள் மெய்மையாய்தலின் போது ஏலவிற்பனை செய்வதற்கு அல்லது அழிப்பதற்கு விதந்துரைக்கப்பட்டிருந்த ரூபா 55,465 கிரய பெறுமதியையுடைய சொத்துக்கள் அந்த விதப்புரைகளை செயற்படுத்த முன்னரே கணக்குகளில் இருந்து அகற்றப்பட்டிருந்தது.

(ஏ) 2011 மற்றும் 2014 ஆண்டுகளுக்கான கடன்கொடுத்தோர் என ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 716,856 தொகைக்கான கடன்கொடுத்தோர் மீதி உரிமை கோரப்படாமையால் பதிவழிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டு திரண்ட நிதிய கணக்கு செலவு வைக்கப்பட்டு கடன்கொடுத்தோர் கணக்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. எனினும் நாட்குறிப்பு மூலம் குறிப்பிட்ட சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஐ) 02 வருடங்களை விஞ்சிய வைப்புக்கள் வருமானத்திற்கு எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டு ரூபா 728,603 தொகைக்கான ஒப்பந்தப் பிணை மற்றும் ரூபா 97,300 இற்கான உடன்படிக்கை பிணை திரண்ட நிதியத்தினூடாக வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் அதனை வைப்புக் கணக்குகளின் கீழேயே வரவு மற்றும் செலவு என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஒ)(i) மீளாய்வாண்டின் போது 03 வங்கிக் கணக்குகள் ஊடாக மேற்கொள்ளப்பட்ட உள்ளகக் காசு மாற்றங்கள் ஆகிய ரூபா 870,000 உள்ளகக் காசு மாற்றத்தின் ஊடாக கணக்கீடு செய்யாமல் முற்பணக் கணக்கின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ii) மேலும், 2014 ஆண்டின் போது அபிவிருத்திக் கணக்கில் இருந்து பொதுக் கணக்கிற்கு முற்பணம் என பெற்றிருந்த ரூபா 300,000 தொகை 2015 ஆண்டின் போது அபிவிருத்தி கணக்கிற்கு மாற்றும் போது உள்ளக பண மாற்றக் கணக்கு ஒன்றின் கீழ் கணக்கீடு செய்யாமல் கடந்த ஆண்டின் முற்பணங்கள் தீர்த்தல் என செலவுக்கு வரவு வைக்கப்பட வேண்டும். என கணித்து திரண்ட நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

(ஓ) முன்னைய ஆண்டு தொடர்பாக செலுத்துவதற்கு இயலாதிருந்த ரூபா 917,622 இற்கான செலவுகள் ஆண்டின் போது கடன்கொடுத்தோருக்கு ஒதுக்கம் செய்யாமல் மீளாய்வாண்டின் போது திரண்ட நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அவ் வருடத்தின் நிதி விளைவுகள் மீது நம்பிக்கை வைக்க முடியாத நிலைமையொன்று காணப்பட்டது.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

09 கணக்கு விடயங்கள் தொடர்பாக மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களின் படி மீதிகள் மற்றும் துணைப் பதிவேடுகளின் படி மீதிகளிடையே ரூபா 15,303,666 இற்கான வித்தியாசமொன்று காணப்பட்டது.

### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

உள்நாட்டுக் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு மேலும் செலுத்த வேண்டியவை எனக் காட்டப்பட்டுள்ள ரூபா 8,148,761 தொகையான கடன் மீதி தொடர்பில் மீதியை உறுதிப்படுத்தல் அல்லது உறுதிப்படுத்தும் ஆவணங்கள் ஏதும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | |
| (i) நிதிப் பிரமாணம் 342 | சபைக்கு சொந்தமான அடிக்கட்டைப் புத்தகங்கள் நிரந்தர காவலாளி ஒருவரின் பொறுப்பில் களஞ்சியப் பொருட்கள் வைக்கப்பட்டுள்ள இடத்தில் வைக்கப்பட்டிருந்தது. |
| (ii) நிதிப் பிரமாணம் 371(2)(ஈ) | வழங்கப்பட்ட கருமம் முடிவடைந்தவுடன் முற்பணங்கள் தீர்க்கப்பட வேண்டுமெனினும் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக ரூபா 327,189 இற்கான முற்பணங்கள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) நிதிப் பிரமாணம் 570/571 | ரூபா 6,593,309 பெறுமதியான காலங்கடந்த வைப்புக்கள் தொடர்பாக குறிப்பிட்ட பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஆ) உள்ளூராட்சி ஆணையாளரின் 2009 மார்ச் 09 திகதிய 2009/01 ஆம் இலக்க சுற்றறிக்கை | 05 வருடங்களுக்கு ஒரு தடவையேனும் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்ட வாடகையைத் திருத்த வேண்டியிருந்தது. புதிய வர்த்தக கடைத்தொகுதி சேர்ந்த 10 கடைகளில் கட்டணம் 2006 ஆண்டின் பின்னர் கணக்காய்வுத் திகதியாகிய 2016 பெப்ரவரி 18 திகதி வரை பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (இ) உள்ளூராட்சி ஆணையாளரின் 2012 மே 29 திகதிய 03/2012 ஆம் இலக்க சுற்றறிக்கை | குறிப்பிட்ட கடமை விடயத்தை குறிப்பிடாமல் சமர்ப்பிக்கப்படும் பில்பத்திரங்களுக்கு வாகன இலக்கம்இன்றி பணம் செலுத்தும் முறையொன்றின் படி 2015 ஆண்டின் போது 07 மந்திரிமார்களுக்குரூபா 157,500 செலுத்தப்பட்டிருந்தது. மேலும் உப தலைவரின் 2014 ஜனவரி முதல் திசெம்பர் வரையான எரிபொருள் படி ரூபா 60,000 தொகை முழுமையாக தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தது. |

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 3,331,362 ஆகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,239,691 ஆகும்.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி செயற்பாட்டு மிகை ரூபா 2,908,329 தொகையினால் குறைந்திருந்ததுடன், அது முன்னைய ஆண்டை விட 47 சதவீத குறைவடைதல் என அவதானிக்கப்பட்டது. இதற்கு முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது மீண்டெழும் வருமானம் குறைவடைந்தமை மற்றும் மீண்டெழும் செலவினங்கள் அதிகரித்தமை என்பன முக்கியமாகப் பாதித்திருந்தன.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்காக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம் உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | மதிப்பீட்டு | உள்ளவாறான | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| வீத வரி மற்றும் வரி | 2,428 | 2,435 | 3,346 |
| வாடகை | 6,615 | 3,900 | 3,977 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,165 | 187 | - |
| ஏனைய வருமானங்கள் | 21,710 | 27,802 | 11,854 |

#### 2.3.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

மீளாய்வாண்டிற்கான மதிப்பீட்டு வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானத்துடன் ஒப்பீடு செய்யும் போது வீதவரி, வாடகை வருமானம் மற்றும் அனுமதிப் பத்திரக் கட்டணம் ஆகிய வருமான விடயங்கள் சேகரிக்கப்பட்ட வருமானம் பாதீட்டு தொகையை விட முறையே 07 சதவீதம், 39 சதவீதம் மற்றும் 84 சதவீதத்தினால் குறைவடைதல் காணப்பட்டது.

#### 2.3.3 வீத வரி

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதி ரூபா 2,520,166 தொகையாகக் காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 5,000 இனை விட மிகையான நிலுவை காணப்படும் வீத வரியாளர்கள் 166 பேர்களிடம் ரூபா 1,910,082 தொகையொன்று அறவிடப்பட வேண்டியிருந்தது. அவை மொத்த நிலுவை பெறுமதியில் 76% சதவீதமாகும்.

**2.3.4 ஏனைய வருமானங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் வியாபார வரி பெற்றுக்கொள்ள வேண்டிய 165 நிறுவனங்களில் இருந்து வர்த்தக அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டிய 36 நிறுவனங்களில் இருந்தும், அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளாத காரணத்தினால் சபை நிதியத்திற்கு ரூபா 229,960 தொகையினை இழந்துள்ளது.

(ஆ) சபையினால் அறிவித்தல் பலகை மற்றும் தொலைதொடர்பு கோபுரக் கட்டணத்திற்காக நிரந்தர பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. அறிவித்தல் பலகை கட்டணம் என 2015 ஆண்டின் போது ஒரு நிறுவனத்தில் இருந்து மாத்திரம் ரூபா 1,575 தொகை பெற்றிருந்ததுடன், தொலைதொடர்பு கோபுரக் கட்டணம் தொடர்பாக கட்டணம் ஏதும் 2015 ஆண்டின் போது பெற்றிருக்கவில்லை.

(இ) முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது சபைக்குச் சொந்தமான 4 முச்சக்கர வண்டி தரிப்பிடங்களின் பதிவு செய்யப்பட்ட 49 முச்சக்கர வண்டி உரிமையாளர்களிடம் பெற வேண்டிய ரூபா 52,600 இற்கான வருமானமொன்றினை சபை இழந்துள்ளது.

**2.3.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2014 செப்தெம்பர் மாதம் முதல் 2015 திசெம்பர் மாதம் வரையான முத்திரைக் கட்டண பட்டோலைகளை பெற்றுக்கொண்டிருக்கவில்லை. அத்துடன் அவ் வருமானங்களை அறவீடு செய்வதில் நீண்ட காலதாமதம் காணப்பட்டது.

(ஆ) 2014 அக்தோபர் மாதம் முதல் 2015 திசெம்பர் மாதம் வரை நீதிமன்றத் தண்டப்பண பட்டோலைகளை பெற்றுக்கொண்டிருக்கவில்லை. அத்துடன் அவ் வருமானங்களை அறவீடு செய்வதில் நீண்ட காலதாமதம் காணப்பட்டது.

**2.3.6 கடை வாடகை**

(அ) சபைக்குச் சொந்தமான 16 சொத்து விடயங்கள் 2015 ஆண்டிற்கான வாடகைக்கு கொடுத்தல் தொடர்பாக கேள்வி அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டிருந்தது. இவ்வாறு அறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட 11 ஆதனங்களுக்காக நிரந்தர இடம் ஒன்று சபையினால் நிர்மாணித்து வழங்கியிக்கவில்லை எனவும் அதன் பிரகாரம் குறிப்பிட்ட ஆதனங்களில் இருந்து வருடாந்த வாடகை பெறுவதற்குரியதாக இருந்து வாய்ப்பினை சபை தவிர்ந்திருந்தமையினால் ஒட்டுமொத்தமாக அச் சொத்துக்களின் குறைந்த விலைகூறல் தொகையின் கூட்டுத்தொகையாகிய ரூபா 4,870,085 தொகையினால் சபைக்கு நட்டமேற்பட்டிருந்தது. மீளாய்வாண்டிற்கான வாடகைக்குக் கொடுத்திருந்த சந்தை வளவில் காணப்பட்ட 2 ஆம் இலக்க மீன் பலகையின் வாடகையாளரும் மேற்கூறியவாறு பொருத்தமான இடம் ஒன்று இல்லை என குறிப்பிட்டு 2015 மார்ச் மாதம் முதல் உடன்படிக்கையில் இருந்து விளகியிருந்தமையால் 2015 ஆண்டின் போது ரூபா 722,917 இற்கான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

(ஆ) பொது சந்தை மாட்டிறைச்சிக் கடை 2014 ஆண்டின் போது உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டு வாடகைக்கு கொடுத்திருந்த வாடகையாளரிடம் 2014 மார்ச் மாதம் நவம்பர் மாதம் வரை அறவிடப்பட வேண்டியிருந்த மாதாந்த வாடகை செலுத்தத் தவறியிருந்தமையால் அவ்வாடகையுடன் சேர்க்கப்பட்டுள்ள தண்டப் பணம் உட்பட கூட்டுத்தொகை ரூபா 538,424 தொகையினை சபையினால் அறவீடு செய்வதற்காக செயற்திட்டம் ஏதும் செயற்படுத்துதல் அல்லது அது தொடர்பாக

சட்டநடவடிக்கை எடுப்பதற்கு கணக்காய்வுத் திகதியாகிய 2016 பெப்ரவரி 18 திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2.3.7 பஸ் நிலைய கடைகளை வாடகைக்கு கொடுத்தல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கலவான நகரத்தில் காணப்பட்ட பழைய பஸ் நிலையம் மற்றும் பொதுக் கடைத்தொகுதி 2014 அக்தோபர் அளவில் உடைத்து அகற்றப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியாகிய 2016 பெப்ரவரி 17 திகதி அளவில் ரூபா 771,662 தொகையினை ஈடுபடுத்தி இச் செயற்திட்டத்தின் விடயங்கள் ஏதும் ஆரம்பிக்கப்பட்டிருக்காததுடன் அத்திவாரமிடும் வைபவத்திற்கான நிர்மாணிக்கப்பட்ட ரூபா 115,400 தொகை பெறுமதியான ஞாபகர்த்த பலகை அகற்றப்பட்டிருந்தது.

(ஆ) இச் செயற்திட்டத்தின் கீழ் அகற்றப்பட்ட பழைய பஸ் நிலைய கடைத்தொகுதி கடைகளுக்குப் பதிலாக பழைய கடை உரிமையாளர்களுக்கு தற்காலிகமாக தமது வியாபாரத்தை செய்வதற்காக ஒரு கடையில் இருந்து மாதாந்தம் ரூபா 500 வீதம் மாதாந்த வாடகை வழங்குவதற்குத் தீர்மானித்திருந்த போதிலும், சபையினால் எதுவித பரிசோதனையும் இன்றி அல்லது அங்கீகாரம் இன்றி அக் கடைகளின் வாடகையாளர்களினால் நிரந்தர கட்டிடமாக புலொக் கற்கள் மற்றும் சீமெந்தினை பயன்படுத்தி நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் பாரிய பொருளாதார பெறுமதியினையுடைய நகரத்தின் மத்தியில் காணப்படும் இந்த வர்த்தக நிலையங்களின் மூலம் சபைக்கு பாரிய வருமானம் ஒன்றினை ஈட்டக்கூடிய வாய்ப்பு கை நழுவியுள்ளதெனவும், சபைக்குச் சொந்தமான ஆதனங்களை முறைதவறி பயன்படுத்துவதற்கு இடம் ஏற்பட்டிருந்ததெனவும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**03. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவத் திறமையின்மை**

கடன்கொடுத்தோர் பதிவேட்டின் பிரகாரம் கடன்கொடுத்தோருக்கு பணம் செலுத்தாமை அல்லது பதிவேடுகள் பேணப்படாமை ஆகிய காரணங்களினால் முன்னைய ஆண்டு தொடர்பாக ரூபா 1,004,238 இற்கான மீதியொன்று அவதானிக்கப்பட்டதுடன், கடனை தீர்ப்பதற்கு அல்லது பதிவேடுகளை சரிசெய்வதற்கு கணக்காய்வுத் திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.2 செயற்பாட்டுத் திறமையின்மை**

2016 பெப்ரவரி 24 ஆம் திகதி தொழிநுட்ப உத்தியோகத்தர் மற்றும் கணக்காய்வு உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் பிரகாரம் பிரதேச சபையின் பொதுபிடிய உப அலுவலகம், நூலகம் மற்றும் ஆயுள்வேத பிணி ஆய்வு நிலையம் நடத்தப்படும் கட்டிடத்தின் பின்பகுதியின் கூரை முற்றாக உடைந்து விழுதல் மற்றும் கூரை இத்துப்போதல் மழைநீர் உள்ளேவருதல் போன்ற விடயங்களின் காரணமாக கட்டிடம் முற்றாக அசுத்தமடைந்து காணப்பட்டது. இதன் பிரகாரம் மருந்து களஞ்சியம் மற்றும் நூலக உபகரணங்கள் மற்றும் புத்தகங்களின் பாதுகாப்புத் தன்மைக்கு பாரிய சவால் ஏற்பட்டுள்ளது.

**3.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

2015 ஆம் ஆண்டில் ரூபா 1,009,210 தொகை பெறுமதிக்கு மின் விளக்கு உபகரணங்கள் கொள்வனவு செய்திருந்த போதிலும் வீதி விளக்கு தேவைகளை இனங்காணாமல் கொள்வனவு செய்திருந்த வீதி விளக்குகள் மற்றும் உபகரண இருப்பு ஒரு வருடம் விட

கூடிய காலம் கடந்திருந்த போதிலும் 2016 பெப்ரவரி 17 திகதி பௌதீகப் பரிசோதனை சந்தர்ப்பம் வரை விளைவற்று களஞ்சியத்தில் குவிக்கப்பட்டிருந்தது.

### 3.4 விளைவற்ற சொத்துக்கள்

மின்சக்தி மற்றும் வலு சக்தி அமைச்சு செயலாளரினால் 2010 ஆகஸ்ட் 17 திகதிய பீஈ/01/01 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் கிராமப் புறங்களில் ''ஏ'' தர பாதைகளை வர்த்தக பிரதேசங்களில் காணப்படும் அனைத்து மின்கம்பங்களிலும் 110 வோட்அதி அமுக்க சோடியம் வேப்பர் விளக்குகள் மாத்திரம் பொருத்த முடியும் எனினும், அதன் மீது கவனம் செலுத்தாமல் மற்றும் நிறுவனத்தின் தேவையை இனங்காணாமல் ரூபா 195,000 தொகை பெறுமதியான 400 வோல்ட் சோடியம் மின் குமிழ்கள் 100 மற்றும் ரூபா 295,000 தொகை பெறுமதியான 250 வோல்ட் சோடியம் சோக் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

### 3.5 ஒப்பந்த நிருவாகம்

#### 3.5.1 பழைய சிங்கராஜ பாதை (கட்டம் 11) கொங்கிரீட் பரப்பி அபிவிருத்தி செய்தல்

நிர்மாண வேலைக்காக பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரருடன் ரூபா 199,282 இற்கான தொகைக்கு 2015 மார்ச் 23 திகதி உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 4 அங்குல கனத்திற்கு கொங்கிரீட் போடப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட வேண்டுமெனினும் பாதையில் போடப்பட்டிருந்த கொங்கிரீட் படையின் கனம் 2½'' ஆகக் காணப்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. அதன் பிரகாரம் நியம கணத்திற்கு மிகவும் குறைவாக கொங்கிரீட் போடுதல் நடைபெற்றுள்ளதெனவும், அதன் பிரகாரம் மிகவும் கூடிய விரைவாக கொங்கிரீட் படை உடைந்து அபிவிருத்தி செய்யப்பட்ட பாதை உடையும் நிலைமை ஏற்படும் அபாயம் ஒன்று காணப்படுகின்றது என 2016 பெப்ரவரி 24 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

#### 3.5.2 வர்த்தக கட்டிடத் தொகுதியுடனான பஸ் நிலையம் நிர்மாணித்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கலவான வர்த்தக கட்டிடத் தொகுதியுடனான பஸ் நிலையம் நிர்மாணிப்பதற்குத் தேவையான நிதியேற்பாடு பிரதேச சபை மற்றும் உள்நாட்டு கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் மூலம் மேற்கொள்ளும் அடிப்படையில் 2009 மே 27 ஆந் திகதி தனியார் ஒப்பந்தக்காரர் ஒருவருடன் ரூபா 8,867,228 தொகை பெறுமதியான 9 மாதத்திற்கான உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டு அத்திவாரம் போடுவதற்காக ஒப்பந்தக்காரருக்கு ரூபா 2,625,942 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. பின்னர் ஒப்பந்த வேலை இடையில் நிறுத்தப்பட்டிருந்ததுடன், ஒப்பந்தக்காரருக்கு எதிராக சட்டநடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

(ஆ) மேற்கூறிய நிர்மாண வேலை கைவிடப்பட்ட வேலைத்தளத்தில் நீர் நிரப்பி காணப்பட்டதுடன் அத்திவார கிடங்கினை மூடுவதற்காக ரூபா 1,700,000 இற்கான மதிப்பீடு ஒன்றின் மீது ரூபா 1,641,338 இற்கான உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அந்த ஒப்பந்தக்காரருக்கு ரூபா 44,624 கொடுப்பனவு ஒன்று செய்யப்பட்டிருந்தது. இந்த ஒப்பந்த வேலைகளும் இடையில் நிறுத்தப்பட்டிருந்தமையால் மேற்கூறிய தொகையின் கீழ் மீண்டும் இந்த கிடங்குகள் நிரப்புவதற்காக வேறு ஒரு ஒப்பந்தக்காரருடன் உடன்படிக்கை மேற்கொண்டு அதற்காக ரூபா 667,293 தொகை ஒன்று செலுத்தப்பட்டிருந்த போதிலும் மேற்கூறிய வேலைத்தளத்தின் உடன்படிக்கை பிரகாரமான வேலைகளை பூர்த்தி செய்வதற்கு முடியாமல் மீண்டும் வேலை இடைநிறுத்தப்பட்டிருந்தது. பின்னர் மீண்டும் அத்திவார கிடங்குகளை நிரப்புவதற்காக ரூபா 1,536,000 இற்கான மதிப்பீட்டுத் தொகையின் மீது தனியார் ஒப்பந்தக்காரருடன் ரூபா 1,491,247 தொகைக்கு உடன்படிக்கை செய்யப்பட்டு அத்திவார கிடங்கினை மூடும் விடயம் பூர்த்தி செய்யப்பட்டு ரூபா 1,491,247 தொகை ஒப்பந்ததாரருக்குச் செலுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம்

அத்திவாரத்தை மூடுவதற்காக முதலாவது மற்றும் இரண்டாவது உடன்படிக்கைகளில் ரூபா 2,203,164 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது.

(இ) மீண்டும் முதலாவது அத்திவாரம் மற்றும் மீதியான வேலைகளை பூர்த்தி செய்வதற்காக ரூபா 73,502,000 மதிப்பீடு ஒன்றின் மூலம் ரூபா 47,440,444 இற்கான உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டு அந்த நிர்மாண வேலைகளுக்காக ரூபா 5,581,140 தொகை ஒன்று செலுத்தியிருந்த போதிலும் அத்திவார நிர்மாணித்தல் வேலையை பூர்த்தி செய்வதற்கு முடியாமல் குறிப்பிட்ட நிர்மாணவேலைகள் இடையில் கைவிடப்பட்டிருந்தது.

(ஈ) அங்கு உடன்படிக்கையை மீறியமை தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுத்தல் பிரதேச சபையினால் தவிர்க்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இந்த சந்தர்ப்பம் வரை மொத்த செயற்திட்டத்திற்காக கூட்டுத்தொகை ரூபா 10,410,245 இற்கான செலவு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(உ) மேலும், மேற்கூறிய நிர்மாண வேலைகளுக்காக வெளிபொறுப்புக்களாகிய ரூபா 4,698,593 தொகையான உறுதியற்ற பொறுப்பொன்று மற்றும் உள்நாட்டுக் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு ரூபா 6,173,000 இற்கான பொறுப்பொன்று சபைக்கு மேற்கொள்வதற்கு நேரிட்டிருந்தது. இது தொடர்பாக கணக்காய்வினால் 2011 மற்றும் 2012 ஆண்டுகளின் போது சுட்டிக்காட்டியிருந்த போதிலும் அவை தொடர்பாக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாமையால் மேற்கூறிய செயற்திட்டத்திற்காக இது வரை அரச நிதியில் இருந்து மேற்கொள்ளப்பட்டுள்ள செலவுகள் ரூபா 10,410,245 தொகை மற்றும் பொறுப்புக்களாகவுள்ள ரூபா 6,173,000 தொகை என்பன விளைவற்றவையாக மாறியுள்ளன.

(ஊ) தரை மாடியில் 18 கடைகள் மற்றும் முதலாம் மாடியில் 31 கடைகள் நிர்மாணிப்பதற்காக உத்தேசித்திருந்த இச் செயற்திட்டம் தற்போது சப்ரகமுவ வீதிப் பிரயாணிகள் போக்குவரத்து அதிகாரச சபை அதனை தனதாக்குவதற்காக உத்தேசித்துள்ளதுடன், நகர அபிவிருத்தி அதிகார சபையினால் கலவான பூந்தோட்ட அபிவிருத்தி செயற்திட்டத்தின் 11 ஆம் கட்டத்தின் கீழ் புதிய வர்த்தக கட்டிடம் ஒன்று நிர்மாணிப்பதற்காக திட்டமிட்டுள்ளது.

### 3.6 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிரந்தர குப்பை மீள்சுழற்சி செயற்திட்டம் ஒன்று நிர்மாணிப்பதற்காக மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் 2009 அக்தோபர் 30 திகதி ரூபா 903,181 இற்கான ஆரம்ப நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்தது. மேற்கூறிய செயற்திட்டத்திற்காக காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு (LPC) இற்கு சொந்தமான காணிகளில் இருந்து 09 ஏக்கர் காணி ஒன்றினை பெற்றுக்கொள்வதற்காக காணியை சுற்றி அளவை செய்வதற்காக ரூபா 70,000 தொகையொன்று செலவிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதி வரை செயற்திட்டத்தின் முன்னேற்றமொன்று அவதானிக்கப்படவில்லை. பிரதேச சபைக்கு நாளாந்தம் சேகரமாகும் குப்பைகள் மற்றும் தகனசாலையால் அகற்றும் கழிவுப் பொருட்கள் சுகாதார பாதுகாப்பு நடைமுறை ஒன்று இன்றி குருலேகங்க கெட்டனுஹேன காணியில் புதைத்தல் மாத்திரம் நடைபெறுவதாக அவதானிக்கப்பட்டது. இதன் பிரகாரம் இந்த செயற்திட்டத்தில் காணப்படும் அசாதாரண தாமதம் காரணமாக அச் செயற்திட்டத்தை நிர்மாணிப்பதற்கான உடன்படிக்கை முடிவாக்கப்பட்டுள்ளதாகவும் ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடுகளை திருப்பிச் செலுத்துமாறு மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் அறிவித்திருந்த போதிலும் தொடர்ந்தும் அப் பணத்தை தடுத்து வைத்திருந்தமையால் பிரதேச சபைக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கக்கூடிய ஆபத்தான நிலை ஒன்று ஏற்பட்டிருந்தது.

(ஆ) குப்பைகளை வேறுபடுத்தி சேகரிப்பது தொடர்பாக பொதுமக்களிடையே பகிரங்கப்படுத்தும் குறிக்கோளில் தெரிவு செய்யப்பட்ட வீடுகளுக்காக உள்ளூராட்சி

ஆணையாளரின் அறிவுரையின் பிரகாரம் வினியோகிப்பதற்கு வழங்கியிருந்த 134 குப்பை பாத்திரங்களில் 66 குப்பை பாத்திரங்கள் சமூர்த்தி நலன்பெறுவோர்கள்/ விதவைகள்/ பெண்கள்/ ஊனமுற்றோர்கள் அடிப்படையாகக் கொண்ட வீடுகளுக்காக இலவசமாக வழங்கப்பட வேண்டுமெனினும் 23 குப்பைப் பாத்திரங்கள் அவ் அறிவுரைகளுக்கு மாற்றமாக வினியோகிக்கப்பட்டிருந்ததெனவும் கூடிய வருமானமுடைய 34 குடும்பங்களுக்கு பாத்திரங்கள் வழங்கப்பட வேண்டுமென்றும், குப்பை பாத்திரங்கள் சுமார் 24 விற்பனை செய்யப்பட்டிருந்ததெனவும் தற்போது அறிவுரைகளின் பிரகாரம் உரிய நலன்பெறுவோருக்கு பகிர்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் 74 குப்பைப் பாத்திரங்கள் தகனசாலை வளவில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்ததெனவும் இருப்புப் பதிவேட்டின் பிரகாரம் 13 குப்பை பாத்திரங்கள் பற்றாக்குறையாக இருந்ததெனவும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(இ) கலவான நகரத்தில் குப்பைகளை அகற்றுவதற்கான கேள்விகள் பெற்றுக்கொள்ளல் தொடர்பாக குத்தகை எடுத்த வாடகையாளர் தெரிவுசெய்யப்பட்ட விதம் பற்றி அல்லது அவ்வேலைக்காக மாதாந்தம் ரூபா 105,000 தொகை செலுத்த வேண்டுமென எடுக்கப்பட்ட சபைத் தீர்மானம் அல்லது அக்கட்டணம் தீர்மானிக்கப்பட்ட விதம் பற்றி கணக்காய்வின் போது விடயங்கள் வெளிப்படுத்தப்படவில்லை. அத்துடன் அவ் விடயங்கள் தொடர்பாக சபை உரிய விதமாக கவனம் செலுத்துதல் மற்றும் போதியளவு கணக்காணிப்புடன் செயற்பட வேண்டுமெனினும், அவ்வாறு போதியளவு நாளாந்த கண்காணிப்பு ஒன்று இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டதென உறுதிப்படுத்தல்கள் ஏதும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

## 04. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

22 செலவு விடயங்கள் தொடர்பாக ரூபா 28,138,225 இற்கான ரூபா 5,000 விஞ்சிய மொத்த ஏற்பாடுகள் எதுவித தேவைக்கும் பயன்படுத்தியிருக்கவில்லை.

### 4.2 வருடாந்த பெறுகைகள் திட்டம்

மீளாய்வாண்டிற்கான வருடாந்த பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.

### 4.3 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வு அலகு ஒன்று நிறுவி அதற்கு தேவையான வசதிகளை வழங்கி செயற்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

### 4.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினை செயற்படுத்துதல்

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு ஒன்று அமைக்கப்பட்டு செயற்படுத்தியிருக்கவில்லை.

## 05. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஈ) ஒப்பந்த நிருவாகம்
(உ) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்